# வடகிழக்குப் பருவமழை; சென்னை வேளச்சேரி – அடையாறு – பள்ளிக்கரணை – ஆதம்பாக்கம் – சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி பகுதிகளில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, வேளச்சேரி பறக்கும் ரயில் திட்ட சாலைப் பகுதியில் கால்வாய் தூர்வாரப்பட்டுள்ளதால் அப்பகுதி பாலத்தின் 6 கண்கள் வழியே நீர் தடையின்றி செல்வதை நேற்று முன்தினம் (21.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு காமராஜ் அவென்யூ, முதல் தெரு சென்னை ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை நேற்று முன்தினம் (21.10.2025) நேரில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். உடன் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



சென்னை சோழிங்கநல்லூர் நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை 44.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கண் நீர் ஒழுங்கியுடன் 850 மீ. நீளத்தில் 1,100 கன அடி வெள்ள நீர் கடத்தும் திறனுடைய இரண்டு கண் கொண்ட கூடுதல் பெரு மூடு வடிகால்வாய் அமைக்கப்பட்டதால் நீர் தடையின்றி செல்வதை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2025) சோழிங்கநல்லூர் பகுதியில் கீழ்கட்டளை உபரி நீர் கால்வாயில் ராட்சத இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2025) சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை அய்யா தெருவில் உள்ள மைய சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதை ஆய்வு செய்தார். இந் நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை அய்யா தெருவில் உள்ள மைய சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதை நேற்று (22.10.2025) அதிகாலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணாசாலை – ஜி.பி.சாலை சந்திப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கட்டுமான பணிகளை நேற்று (22.10.2025) அதிகாலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வடகிழக்குப் பருவ மழையை முன்னிட்டு அடையாறு – வேளச்சேரி - சோழிங்கநல்லூர் - ஆதம்பாக்கம் பகுதிகளில் முன்னேற்பாட்டுப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

சென்னை, அக். 23-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2025) வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, தயார் நிலையில் உள்ள நிவாரண மையங்கள், உணவு தயாரிக்கும் கூடங்கள், உணவுக் கூடங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், சீரமைக்கப்பட்டுள்ள வெள்ளநீர் கடத்தி கால்வாய்கள் மற்றும் ஆகாயத் தாமரை அகற்றும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு காமராஜ் அவென்யூ முதல் தெரு சென்னை ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, வேளச்சேரி பறக்கும் ரயில் திட்ட சாலைப் பகுதியில் கால்வாய் தூர்வாரப்பட்டுள்ள தால் அப்பகுதி பாலத்தின் 6 கண்கள் வழியே நீர் தடையின்றி செல்வதையும் துணை முதலமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சென்னை சோழிங்கநல்லூர் நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை 44.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கண் நீர் ஒழுங்கியுடன் 850 மீ. நீளத்தில் 1,100 கன.அடி வெள்ள நீர் கடத்தும் திறனுடைய இரண்டு கண் கொண்ட கூடுதல் பெரு மூடு வடிகால்வாய் அமைக்கப்பட்டதால் நீர் தடையின்றி செல்வதை துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சோழிங்கநல்லூர் பகுதியில் கீழ்கட்டளை உபரி நீர் கால்வாயில் ராட்சத இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தென் சென்னையில் ஆதம்பாக்கம் பகுதியில் தேங்கும் மழை நீரை வேளச்சேரி வழியாக பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதிக்கு கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் வீராங்கல் ஓடையில், ரூ.5.60 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகள், ஓடையின் கரையோரங்களில் 1 மீட்டர் உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர், ஓடைக்குள் குப்பைகள் தேங்காமல் இருக்க, தடுப்பு சுவருக்கு மேல் 1.60 மீட்டர் அளவுக்கு கம்பி வலை (Chain Link Mesh) அமைக்கப்பட்டுள்ளதையும் துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் ஆதம்பாக்கம் கக்கன் பாலம் அருகே வெள்ளநீரை வெளியேற்ற 100 ஹெச்.பி திறனுடைய மேட்டார் பம்ப் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ராஜலட்சுமி நகர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை மேல்நிலைப் பள்ளியில் தற்காலிக நிவாரண மையத்திற்கான வசதிகள் குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத்துறைச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், உள்பட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.